Registered as a Newspaper in Ceylon

விலை சதம்10

ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (19-5-66) இதழ் 101

பராபவ வைகாசி 6 பிறை முஹர்ரம் 27 வியாழக்கிழமை

விண்வெளி நாய்களின் உடல் நிலையில் மாற்றம்

மாஸ்கோ, மே 18

பூமியை இருபத்தியிரண்டு தினங்கள் வலம் வந்த இரண்டுரஷ்ய விண் வெளி நாய்களின் உடல் நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாகசோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' அறிவித்துள்ளது.

சதைகளில் சுருக்கங்கள் ஏற்பட்டிருப்பது தான் ''கல்யெ''ச் சத்து உடலிலிருந்து முற்றுக நீங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால விண் வெளிப் பிரயாணத்தின் போது பிராணிகளின் தேகநிலையில் பல மாற்றங்கள் ஏற்படுகிறது என்று ரஷ்ய விண்வெளி நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். பூமிக்குத் திரும்பியதும் இம்மாற்றங்கள் மறைந்துவிடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிறீஸி, பிளக்கி என்ற இரண்டுரஷ்ய விண்வெளி நாய்களும் ''காஸ்மாஸ்-110'' விண்வெளிக் கப்பலில் மார்ச் மாதம் 22-ந் திகதி வானவெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஏப்ரல் மாதம் 16-ந் திகதி இந்த நாய்கள் பூமிக்குத் திரும்பின. (பிடிஸி)

தன்னிறைவு பெற்ற தமிழ் பல்கலைக்கழகம்

வடபகுதியில் மீன்பிடி தொழில் விருத்தி

ராஜாத்தினம் இன்று கூட்டும் முக்கிய மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியில் மீன்பிடித் தொழிலை விருத்தி செய்வதற்கான சில ஆலோசனைகளை தமிழரசுக்கட்சியின் பருத்தித்துறைத் தொகுதிப் பார்லிமெண்ட் அங்கத்தவர் திரு. க. துரைரத்தினம் இன்று வியாழக்கிழமை, மீன்பிடிக் கூட்டுஸ்தாபனத் தலைவரும் முன்னாள் வெலிமடை எம். பி. யுமான திரு. கே. எம். பி. ராஜரத்தினம் கூட்டும் ஒரு முக்கிய மகாநாட்டில் சமர்ப்பிக்க இருக்கிறார்.

வடபகுதியில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள், யந்திரப்படகுகள் மற்றும் தேவையான, வசதிகள் உபகரணங்கள் ஆகியவை அளிப்பதுபற்றியும் 1964-ம்வருடம் டிசம்பர் மாதம் வீசிய புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இன்னும் போதிய உதவி அளிக்கப்படவேண்டியது பற்றியும் திரு. துரைரத்தினம் ஆலோசனைகள் தெரிவிப்பார்.

வடபகுதியில் மீன்களின் விலையிலுள்ள வித்தியாசங்களை நீக்குவதுபற்றியும் மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் மூலம் நியாய விலைக்கடைகள் திறப்பது பற்றியும் அவர் தமது யோசனைகளைத் தெரிவிப்பார்.

படித்த வாலிபர்களுக்கு பருத்தித்துறை எம்.பி.யோசனை

யாழ்ப்பாணம், வியா.

படித்த வாலிபர்கள் உத்தியோகத்தை நம்பியிருப்பதால் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை. கமத்தொழில், கடற்தொழில் ஆகிய துறைகளில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதாரத்தையும், தம் எதிர்காலத்தையும் வளப்படுத்தும் பாதையில் செல்வதற்கு வகைசெய்ய வேண்டும்.

பருத்தித்துறையில் ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கு அளிக்கப்பட்ட பொதுவரவேற்பில் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. துரைரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

தேசிய அரசாங்கம் அபிவிருத்தி வேலைகளுக்கு முக்கியத்துவம் அளித்துவருகின்றது. வடபகுதி மீளாய்ச் செய்கையில் போதிய கவனம் செலுத்தினால் நல்ல பலன் பெற்றுக்கொள்ளலாம். வெண்காய உற்பத்தியிலும் கவனம் செலுத்தினால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டி

(6-ம் பக்கம் பார்க்க)

''ஒத்துழைப்புடன் முன்னேறுவோம்''

பாலம் திறப்பு விழாவில் ஜே. ஆர்.

மாத்தறை, புதன்

வல்வேறு இன மக்களிடையே நிலவும் ஒற்றுமையில்தான் நாட்டின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது என்று ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் அமைக்கப்பட்ட புதிய பாலமொன்றை நேற்று மாலை திறந்துவைத்துப் பேசுகையில்தான் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார்.

''35 லட்சம் ரூபா செலவில் இலங்கையர்களே சொண்டே முதற்தடவையாக நிறுவப்பட்டிருக்கும் இப்பாலம் எமக்குப் பெருமையளிக்கிறது. இதுபோன்று பல பகுதிகளிலும் பாலங்கள் அமைக்கப்படவேண்டும். நாட்டிலுள்ள சகல மக்களும் ஒற்றுமையாக இயங்குவதன் மூலமே நாட்டை துரிதமாக முன்னேற்ற முடியும்'' என்றும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தெரிவித்தார்.

தந்தி, தபால் மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா உட்பட பலர் இவ்வைபவத்தில் பேசினர்.

பாலத்தை நிறுவுவதில் வேலைசெய்த தொழிலாளர் ஒவ்வொருவரும் இதில் பேசியதுகுறிப்பிடத்தக்கது

வடக்கு, கிழக்கு, மலைநாட்டுக்கு பொதுவாக அமையவேண்டும்

தமிழரசுக்கட்சி பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம் வியாழன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும், மலைநாட்டுக்கும் பொதுவான தன்னிறைவுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகமொன்றை நிறுவித்தருமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வதென நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழரசுக்கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

இந்தப் பல்கலைக்கழகம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மத்தியமான ஒரு இடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று பொதுக்குழுவில் பல அங்கத்தவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

நேற்று யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் கூடிய பொதுக்குழுக்கூட்டம் அந்தரங்கமாகவே நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடக்கம் வெண்காவக்கூடை சம்பந்தமான விஷயங்கள் வரை விவாதிக்கப்பட்டது. கல்வி அமைச்சர் சமர்ப்பித்த வெள்ளை அறிக்கையில் போதனாமொழி பற்றித் தெரிவித்துள்ள அபிப்பிராயம் பற்றி விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.

ஓய்வுபெற்ற ஊழியர்

ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் பிரச்னை பற்றி நீதி மந்திரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், நிறுத்தப்பட்ட அவர்களதுசம்பள உயர்வை கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென்று மந்திரி தமக்கு வாக்குறுதியளித்திருப்பதாகவும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பொதுக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கல்வி பயிலும் பிள்ளைகளின் தாய்மொழி தமிழோ, சிங்களமோ அந்த மொழியிலேயே கல்விபயிற்றப்படவேண்டுமென்ற கருத்தை பொதுக்குழு வரவேற்றது.

தோட்டப்பாடசாலை கல்வித்தரம்

தோட்டப்பாடசாலைகளின் கல்வித்தரம் அரசாங்கப்பாடசாலைகளின் கல்வித்தரத்துக்கு உயர்த்தப்படவேண்டுமென்றும், தோட்டப்பாடசாலைகளிலிருந்து கல்வி பயின்று வெளியேறும்

(6-ம் பக்கம் பார்க்க)

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் பிரஜாவுரிமை பெறுவோர்

பதிவுப் பிரஜைகள் இடாப்பில் இடம்பெறுவர்

புதிய மசோதா தயார்

— கே. நடராஜ் —

கொழும்பு, வியாழன்

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை பிரஜாவுரிமை பெறும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரான நாடற்றவர்கள் 3 லட்சம் பேரும் இலங்கையின் இதர பதிவுபெற்ற பிரஜைகளின் தேர்தல் ஜாபிதாவிலேயே இடம்பெறுவார்கள். பதிவு பெற்ற பிரஜைகள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் இவர்களும் அனுபவிப்பார்கள்.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் வகையில் பார்லிமெண்டில் பிரதமமந்திரி விரைவில் சமர்ப்பிப்பதாக வாக்களித்துள்ள புதிய நகல்மசோதாவில மேற்படி அம்சம் இடம்பெற்றுள்ளது.

இந்த மசோதாவின் நிபந்தனைகளுக்கு இணங்க இலங்கை அரசாங்கத்தால் நாடற்றவர்களாக என்று பதிவுசெய்யப்பட்டவர்கள் இலங்கை பிரஜாவுரிமை பெறுவதற்கான தகுதிகளை நிரூபித்து பிரஜாவுரிமை பெறத் தவறுவாராயின் ''கட்டாயமாக நாடு கடத்தப்படவிருப்பவர்கள்'' என்று கருதப்படுவார்கள்.

இந்திய அரசாங்கம் கட்டாயமாக நாடு கடத்தும் கொள்கையை தொடர்பாக எதிர்த்துவந்துள்ளது. கட்டாயநாடுகடத்தல் சம்பந்தமான அம்சம் இந்த மசோதாவில் இடம்பெற்றிருப்பது ஏற்கனவே ஏற்றுக்

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் புதிய அரசியல் கட்சி!

யாழ்ப்பாணம், வியாழன்

'தமிழர் முன்னேற்ற இயக்கம்' என்ற பெயருடன் யாழ்ப்பாணத்தில் உதயமாகியிருக்கும் புதிய அரசியல் சார்புள்ள கட்சியின் ஆலோசனைக் கூட்டம் டாக்டர் வி. கே. பரமநாயகம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் மேற்படி இயக்கத்துக்கென புதிதாக எடுத்திருக்கும் கட்டிடத்திலேயே இக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தலும், மலைநாட்டுத் தமிழர் நலனைக் கவனிக்கவுமே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் காலங்களில் மட்டும் நமது அரசியல் கட்சிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றதெனக் கூறி, கைத்தொழில், பொருளாதார வளர்ச்சி, சமூக சீர்திருத்தம் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கும், தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் புதிய இயக்கம் உழைக்குமென்று கூட்டத்தில் திரு. பரமநாயகம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மனித சமுதாயத்தின் இன்னல்களைத் தீர்க்க இரண்டு வழிகளைத் தவிர வேறெதுவும் எனக்குத் தெரியவில்லை. உண்மையாக இருங்கள். எவ்வகையிலும் அகிம்சையைக் கடைப்பிடியுங்கள். இதன்படி நடந்தால், உங்கள் எல்லாச் சங்கடங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்குவது உறுதி — மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 23[illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 6 உ (19-5-66)

மனித நீதியன்று

புதிய கல்வித் திட்டத்திலே இலங்கையிலுள்ள தோட்டப்பகுதி குழந்தைகளின் கல்விக்கு எவ்வித விமோசனமும் செய்யப்படவில்லை என்றும், இப்போதுள்ள மோசமான நிலைமையே நீடிக்குமென்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையாயின், அது நிச்சயம் மனித நீதியாகாது.

நேற்று நமது அரசியல் நிருபர் சுட்டிக்காட்டியதுபோல், மலைநாட்டில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்தான் இலங்கையின் வருமானத்தில் பெரும்பகுதியை ஈட்டிக் கொடுக்கின்றார்கள். அப்படியிருந்தும், அவர்களது அருமைக் குழந்தைகளின் கல்விக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்காமல், தோட்ட நிர்வாகமே தொடர்ந்து அப்பொறுப்பை ஏற்கும்படி செய்துள்ளனராம். காரணம் கேட்டதற்கு, அரசாங்கத்திடம் பணமில்லை என்று பிரதம மந்திரி சமாதானம் கூறியதாகத் தெரிகிறது. மற்ற எவ்வளவோ காரியங்களுக்கெல்லாம் அரசாங்கத்திடம் பணம் இருக்கையில், மலையகத்து எளிய குழந்தைகளுக்கு மற்றவர்களைப்போல் உயிர் போன்ற கல்வியை அளிக்கத்தானா பணமில்லை? அப்படிப் பணமில்லையாயின், பணம் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டியது ஒரு நாகரிக அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

தோட்ட நிர்வாகம் செலவைக் குறைத்து லாபத்தைப் பெருக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும். அவர்கள், அங்குள்ள குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், மக்கள் குடியிருப்பு போன்ற பொறுப்புகளை சரிவரக் கவனிக்க முடியாதென்றும், சர்வதேச தொழில் ஸ்தாபன நிபுணர்கள் நேரில் வந்து விசாரித்து ஏற்கெனவே கருத்துத் தெரிவித்துள்ளனர். தோட்டப்பகுதிப் பள்ளிக்கூடங்களும், அங்கு ஆசிரியர்களின் சம்பளமும், கல்விமுறையும் எவ்வளவு மோசமென்பதைப் பற்றி பார்லிமெண்டிலும் வெளியிலும் எவ்வளவோ இடித்து இடித்துக் கூறப்பட்டுள்ளன. இதை உணர்ந்து, அக்கல்விப் பொறுப்பை அரசாங்கமே ஏற்பதாக உறுதிமொழியும் அளிக்கப்பட்டது. தோட்டப்பள்ளிகளை அரசாங்கம் பொறுப்பேற்பதாகஏற்கெனவே உறுதி கூறியுமுள்ளது. என்றாலும் இங்கு கல்வி முறையையே அடியோடு புதிதாக மாற்றி அமைக்கும் இச்சமயத்திலும் கூட தோட்டப் பள்ளிக்கூடங்களை மட்டும் திருத்தாமல் அப்படியே இருக்க விடுவது சகிக்க முடியாதது. இப்போது திருத்தாவிடில் இனி எப்போதுதான் அவற்றைத் திருத்தப் போகின்றார்கள்?

அரசாங்கத்திடம் பணமில்லையாயினும், ஒரு ராத்தல் தேயிலைக்குக் கல்விவரியாக ஒரு சதம் வீதம் வசூலிக்க முற்பட்டால், தேவைக்கான பணம் பெறலாம். மனமுண்டானால் நிச்சயம் மார்க்கமுண்டு. தங்களால் முடியாத இப்பொறுப்பை தோட்ட நிர்வாகம் தொடர்ந்து ஏற்கப் போகிறதா? இனி இப் பொறுப்பைத் தங்களால் ஏற்க முடியாதென்றும் இதற்கான பணத்தைத் தாங்கள் வரியாகக் கொடுத்துவிடுவதாகவும் அவர்கள் சொல்லுவதே நாணயம். தங்களால் நிறைவேற்ற முடியாத ஒரு முக்கிய பொறுப்பை, தொடர்ந்து ஏற்றுத் தொழிலாளரின் குழந்தைகளுக்குத் தக்க கல்விக்கான வசதிகளை அளிக்காமலிருப்பின், தொழிலாளரின் அதிருப்திக்கும் ஆத்திரத்துக்கும் அவர்களும் உள்ளாகி தொழில் அமைதியும் கெடக்கூடும்.

தோட்டப் பகுதிகளில் ஏராளமான ''யூனியன்கள்'' போட்டா போட்டியுடன் நடக்கின்றன. தொழிலாளரின் அருமைக் குழந்தைகளின் கல்விபற்றிய இம்முக்கிய விஷயத்திலே அவர்கள் வாய் பேசாமல் இருக்கப் போகிறார்களா? மற்றப் பகுதிகளிலே இலவசக் கல்வியை மேலான முறையில் அளிக்கக் கோடிக் கணக்காகச் செலவழிக்கும் அரசாங்கம் மலைநாட்டுத் தொழிலாளர் குழந்தைகளுக்கும் அதே வித கல்வியை எப்படியும் அளிக்க வேண்டுமென்று ஏகோபித்து வற்புறுத்த வேண்டும். இச்சமயம் விட்டால், இனி சமீபத்தில் இந்த வேற்றுமையும் அநீதியும் நீங்க முடியாது போகும்.

தனிப்பட்டவர்கள் அப்பகுதியிலே சொந்தச் செலவில் பள்ளிக்கூடங்களை நடத்தலாமென்று ஒரு ''சலுகை'' அளிக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாம். இதனால் எளிய தொழிலாளரின் குழந்தைகளுக்கு எவ்வித நன்மையுமேற்பட முடியாது. தனிப்பட்ட பள்ளிக்கூடங்கள் இலவசக் கல்வியை. அரசாங்க உதவியின்றி நீடித்து அளிக்க முடியுமா? தோட்ட நிர்வாகிகளும், தொழிலாளர் யூனியன்களும், அவர்களது பிரதிநிதிகளும் இவ்விஷயத்தில் ஒத்துழைத்துத் தக்க கிளர்ச்சி செய்தால் அரசாங்கம் செவிசாய்க்கவே வேண்டியிருக்கும். அக்குழந்தைகள் பெரும்பாலும் சைவத்தமிழ்க் குழந்தைகள் என்பதை ஞாபகத்திலிருத்தி இத்தீவிலுள்ள தமிழ், சைவ ஸ்தாபனங்களும், தலைவர்களும் ஒத்துழைத்து அம்மக்களின் சந்ததியினருக்கு சாதாரண நீதி வழங்க எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். தவறின், அவர்கள் தங்கள் முக்கிய கடமையிலிருந்து தவறியவர்களாவதுடன், சம்பந்தப்பட்ட மக்களின் சாபத்துக்கும் உள்ளாவர்.

நாகரிகம் வளர நோயும் வளருகிறது

இருதய ரத்தஓட்ட மண்டலநோய்களில் மிகக்கொடியவை மூன்று. இரத்தமிகு அழுத்தம்; ஏதெரோஸ் கிளிரோசிஸ்; இருதயக் குறைபாடு. உயிருக்கு உலைவைக்கும் இந்த மூவர் சிலவேளைகளில் ஒரே நபரிடமும் காணப்படுவதுண்டு.

இந்நோய்களின் பொதுவான காரணம்; சுற்றுப்புற சூழ்நிலை அம்சங்களிலும், நவீனகால சமூக நிலையங்களிலுமே பொதிந்து கிடக்கிறது.

நாகரீக, கலாசார வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றத்துடன்தான் இணைந்துள்ளது. எனினும் மனித உடல் மிகச் சிறப்பாக அமைந்திருந்தபோதும், புதிய வாழும் நிலைமைகளுக்கேற்ப வேகமாகத் தன்னை மாற்றியமைத்துக்கொள்ள இயலவில்லை. இதற்குகாலம், விசேஷ பயிற்சி, வேலை முறைமைகளில் சில முன்னேற்றங்கள் தொழிற்சாலைகளின் பேரிரைச்சல்குறைவு ஆகியவை தேவைப்படுகின்றன.

சிறியசிறிய தமனிகள் சுருங்கி விடுவதுதான் இரத்த மிகு அழுத்தத்தின் அடிப்படைக் காரணம், ஒவ்வொருமுறை உடல் உழைப்பு ஏற்படும்போதும் தசை மண்டலத்திற்கு அதிகஇரத்தம் பாய்கிறது. அதிக இரத்தத்தை தசைகளுக்குத் தேவையானபோது பாய்ச்சுவதற்கு இரத்த ஓட்டமண்டலம் சக்தி பெற்றதாக இருத்தல்வேண்டும். செய்யும் வேலையைக் குறித்த சிந்தனையே, பொதுவாக இரத்த ஓட்ட மண்டலத்தை அது செய்ய வேண்டிய வேலைக்கேற்றாற்போல, தயார்நிலைக்குக் கொண்டு வருகிறது.

தசைகளின் இயக்கமும், அதற்கேற்றாற்போலஇரத்த ஓட்ட மண்டலம் செயல்படுதலும், நரம்புத்தூண்டல்களையும். அட்ரினல் சுரப்பிகளிலிருந்து கசியும் சுரப்புகளையும் பொறுத்து.

அட்ரினலின் என்ற சுரப்பை, உணர்ச்சி சுரப்பி என்றே கூறுவதுண்டு, நரம்புத்தூண்டுதலில் பங்கு பெறும் ரசாயனப் பொருள் அதுவே. தசைச்செயல் முடிவடைந்தபின்னர், அட்ரினலினும் சிதைவடைந்து விடுகிறது. நரம்புத்தூண்டுதல் பழுதடைந்தால், தசை இயக்கம் முடிவடைந்த பின்னரும் அட்ரினலின் சிதைவடையாமல் உடலில் தங்கி, சிறிய ரத்தக் குழல்கள் மேலும் சுருங்கியே இருத்தலில் முடிகிறது.

உணர்ச்சி வசத்தின் காரணமாக ஏற்படும் நரம்பு மண்டல மிகு அழுத்தம், அதிகமான தசை இயக்கத்துடன் இணையாவிட்டால், இரத்தமிகு அழுத்தம் ஏற்படுகிறது.

இரத்தக்கோளாறை எப்படித் தவிர்ப்பது?

ஒவ்வொரு முறையும் நரம்புத் தூண்டலோ, உணர்ச்சிக் கொந்தளிப்போ ஏற்படும்போது, உடல் தசை உழைப்பு ஏற்பட வேண்டும் என்று கூறமுடியுமா?

பரபரப்பு ஏற்படும் போதெல்லாம், சாதாரணமான சில தசைச்செயல்கள் கைகளை ஆட்டுதல், நடத்தல் போன்றவை ஏற்படுகின்றன என்பதை நாம் அறிவோம். ஆனால் இது பிரச்னையைத் தீர்த்து விடுவதில்லை. நரம்புத் தூண்டல்கள் ஏற்பட்டு, இயற்கையான பிரதிசெயல்கள் உண்டாகவேண்டும். இது ஒழுங்கான உடற்பயிற்சியின் மூலமே சாத்தியம்.

இரத்த மிகு அழுத்தம், இருதயத்திற்குப் போதுமான ரத்தமின்மை ஆகியவற்றை, ஓரளவிற்கு, உடல், மன உழைப்பை சரியான விகிதத்தில் அமைத்துக்கொள்வதன் மூலம் தடுக்க முடியும்.

இந்த வியாதிகள் ஏற்பட உணவு எவ்விதத்திலேனும் காரமாக உள்ளதா?

சமீப காலத்தில், இந்த அம்சம் பெரும் விவாதத்திற்குரியதாக இருந்து வருகிறது. ஏதெரோஸ்கிளிரோசிஸ் நோய், உணவின் காரணமாகத்தான் ஏற்படுகிறதுஎன்றும், உணவிலுள்ள அதிகப்படியான கொழுப்பு பொருளே கோலெஸ்டிரின் உட்பட இதற்குக் காரணம் என்றும் சில விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

உயிர் குடிக்கும் இம் மூவரை வெட்டி வீழ்த்த உலகெங்கும் உள்ள மருந்தியலாளர்கள் முயன்று வருகின்றனர். எளிதில் புலனாகும் இந்நோயின் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து, இந்நோயினால் மனித உடலில் எவ்வித மாற்றங்களும் நிகழும் முன்னரே சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டால் பலன் கிடைக்கும். இந்த நோயின் ஆரம்பம் பல மாற்றங்களை ஏற்படுத்த வழி வகுக்கிறது. ஆகவே, மாற்றங்கள் ஏற்படுமுன்னர், நாம் ஏதேனும் செய்தால், நோயாளியைப் பூரணமாக இந்நோயினின்றும் காப்பாற்றிவிட முடியும்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லையாம். பிறகு யாத்திரைசெல்வதாகக்கூறியதின்மீதேவிசாகிடைத்ததாயும், அதனால் நல்லூர்க் கந்தனைக் காலையில் தரிசிக்க விரும்புவதாவும் தெரிவித்தார்.

விசா கிடைப்பதில் அவருக்கேகஷ்டமென்றால் மற்றவர்களைப்பற்றி கேட்க வேண்டுமா? இதைப்பற்றி இங்குவிசாரித்ததில், பழைய டயஸ் தர்பாரைச் சேர்ந்தவர்கள் சென்னையிலும் குடியேற்ற காரியாலயத்திலும் இருப்பதாயும், அதனால் பழைய போக்கின்படியே கெடுபிடிகள் இருப்பதாயும் இதைப்பற்றி பரிசீலனை செய்து அவர்களை மாற்றுவதுடன், திருச்சியிலும் ஒரு விசா கந்தோரை ஆரம்பிக்க வேண்டுமென்றும் விஷயமறிந்த ஓர் அன்பர் சொல்லுகிறார். இரு அரசாங்கப் பிரதிநிதிகளும் இதைப்பற்றிப் பேசி, இது சம்பந்தமான வீண்சங்கடங்களை நீக்குவார்களா? டயஸ் தர்பாருக்கு முன்னிருந்த நிலையை மீண்டும் ஏற்படுத்துவார்களாயின் பலரது நன்றிக்கும் பாத்திரமாவதுடன் இரு தேச நட்பையும் பலப்படுத்துபவராவர்.

ஃ ஃ ஃ

தொண்டாய்ப் பணிவார்க்கணியார் தாமே தூநீறணியுஞ் சுவண்டர் தாமே, தண்தாமரையானும் மாலுந்தேடத் தழலுருவாய் ஓங்கி நிமிர்ந்தார் தாமே, பண்தான் இசை பாட நின்றார் தாமே பழனை பதியாவுடையார் தாமே, திண்டோள்களெட்டு முடையார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே.

—அப்பர் சுவாமிகள்

ஐயாறன் எழுதுகிறது

ரோட்டரி சங்க கவர்னர் சீனிவாசனை நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசினேன். அவரைப் பற்றியும், ரோட்டரியைப்பற்றியும்சில ருசிகரமான விபரங்களை அறிந்தேன்.

ரோட்டரி என்ற சர்வதேச ஸ்தாபனம் 60வருடத்துக்கு முன்பாக அமெரிக்காவிலே ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு இப்போது 130க்கு மேற்பட்ட நாடுகளில் 6 லட்சம் மெம்பர்களுக்கு மேல் கொண்டதாக வளர்ந்து வருகின்றது. பல பல தொழில்களிலும் முன்னணியில் இருந்துவரும் பிரமுகர்களும் தலைவர்களுமே இதில் அங்கத்தினராகச் சேர்க்கப்படுகின்றனராம்.

ஃ ஃ ஃ

இதன் நோக்கம் என்ன தெரியுமா? தன்னலத்தை விட பொதுநலனையும் சேவையையுமே பெரிதெனக் கருதித் தொண்டாற்றுவது தான். முதலாளிமார்கள் நியாயமான விலைக்கு, நல்ல சரக்குகளைப் பொதுமக்களுக்குக் கிடைக்கும்படி செய்வதுடன் தங்களிடம் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு சம்பளத்தைக்குறைக்காமல் அவர்களுக்கு நியாயம் வழங்குவதுமாகும். ஒவ்வொரு ஊரிலுமுள்ள ரோட்டரி சங்கமும் சிற்சில பொதுப் பணிகளை ஏற்று நடத்துவதாகவும் யாழ்ப்பாணத்திலுள்ள ரோட்டரி சங்கத்தார் அவ்வப்போது பலபல ஸ்தாபனங்கள்மூலம்உதவிகளளித்துவருவதுடன், அதன் வெள்ளிவிழா ஆண்டான இவ்வருடத்தில் சமூக சேவைக்கான நலதோர் ஸ்தாபனத்தை இங்குஅமைக்க இருப்பதாக, சங்கத் தலைவர் தௌலத்ராம் அறிவித்தார்.

அதாவது நோய்வாய்ப்பட்டு நோய் குணமடைந்தவர்கள், பலவீனமான நிலையிலே தேற்றிக்கொள்வதற்கான ஒரு ஸ்தாபனம் தான். எளிய மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் போன்றது. இவ்வித ஸ்தாபனம் இலங்கையில் எங்குமில்லை. அதைஇங்குஅமைக்க யாழ்ப்பாண ரோட்டரி முன்வந்துள்ளது பெரிதும் பாராட்டத்தக்கது. எடுக்கும் காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் ஆற்றலும், செல்வமும் செல்வாக்குமுள்ளவர்கள் பலர் இச்சங்கத்திலிருப்பதால் இந்தப் புதிய ஸ்தாபனம், மற்றவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக அமைந்து தொண்டாற்றுமென்பதே என்நம்பிக்கை.

ஃ ஃ ஃ

இலங்கை சென்னை, கேரளம், இம்மூன்று மாவட்டங்களும் சேர்ந்த ஒருபகுதியின் கவர்னர்தான் திருச்சியைச் சேர்ந்த சீனிவாசன் அவர்கள். சாதாரண நிலையிலிருந்து தம் சொந்த முயற்சியால், இப்போது சென்னையிலே ''ஸ்டான்டட் மோட்டார்ஸ்'' தொழிற்சாலையில் தலைமை அதிபராக இருந்து, மோட்டார்களை உற்பத்தி செய்வதுடன், வேறு பல பல ஸ்தாபனங்களிலும் டைரக்டராக இருக்கின்றார். அவ்வளவு பெரிய முதலாளியாக இருப்பினும், மிக எளிய சுபாவம். யாழ்ப்பாணத்துக்கு வந்தது இதுவே முதல்தடவையென்றும் சென்னையைவிட யாழ்ப்பாணத்தில் வெயில் குறைவென்றும், தெரிவித்ததும் மிக ஆறுதலாக இருந்தது.

ரோட்டரி ஸ்தாபன அழைப்பின் மீது வந்த அவருக்கும் நமது காருண்ய அரசாங்க யந்திரமூலம் விசா

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. நா. வில் ரொடீஷியா

ஸ்மித் ஆட்சியாளர் மீது பிரிட்டன் படைபலம் உபயோகிக்க கோரிக்கை

தளம் கொடுத்து உதவ தயார் என்கிறது ஸாம்பியா

ஸ்மித் வேண்டுகோளை யுதாண்ட் புறக்கணித்தார்

நியுயோர்க், மே18

ரொடீஷியாவில் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர பிரிட்டன் படைபலத்தை உபயோகிக்கவேண்டும் என்று இந்தியா, பாகிஸ்தான், ஸாம்பியா உள்ளிட்டு பல நாடுகள் கோரியுள்ளன.

ஐக்கியநாடுகள் பந்தோபஸ்து சபையில் நடைபெற்ற ரொடீஷியா சம்பந்தமான விவாதத்தின் போதுதான் மேற்கண்ட கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

32 ஆபிரிக்க நாடுகளின் கோரிக்கைமீது ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபையில் ரொடீஷிய விவகாரம் சம்பந்தமாக விவாதம் நேற்று ஆரம்பமானது.

இந்த விவாதத்தில் இந்தியா, பாகிஸ்தான், அல்ஜீரியா ஆகிய நாடுகளின் ஐ. நா. வுக்கான பிரதிநிதிகளும் ஸெனகோல், ஸாம்பியா ஆகிய நாடுகளின் வெளி நாட்டு மந்திரிகளும் கலந்து கொள்ளுகின்றனர். இந்தியா, பாகிஸ்தான், அல்ஜீரியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் இவ்விவாதத்தில் வாக்குரிமை இருக்காது.

இந்தியா யோசனை

நேற்று ஆரம்பமான விவாதத்தில் இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி பேசுகையில், சட்டவிரோதமான ஸ்மித் ஆட்சியைக் கலைப்பதற்கு பிரிட்டன் படைபலம் உபயோகிக்க வேண்டும் என்று கூறினார்.

விவாதத்தின்போது இந்தியா ஆறு அம்சதிட்டம் ஒன்றை சமர்ப்பித்தது

○ சிறுபான்மை வெள்ளையர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர பிரிட்டன் படைபலம் உபயோகிக்க வேண்டும்.

○ 1961-ம் ஆண்டு அரசியல் ஸாசனம் செல்லுபடியாகாது என்று அறிவித்து அதனை முடிவுக்குக்கொண்டு வரவேண்டும்.

○ ரொடீஷியாவில் பெரும்பான்மையான மக்களுக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் புதிய அரசியல் சாஸனத்தில் உத்தரவாதமளிக்கவேண்டும்.

○ இடைக்கால அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டும்.

○ சுதந்திரமான பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறவேண்டும்.

திரு. பார்த்தசாரதி தொடர்ந்து பேசுகையில், ரொடீஷியாமீது பொருளாதார எண்ணெய்த் தடைகளை பிரிட்டன் விதித்திருந்தாலும் அது வெற்றியளிக்கவில்லையென்றும் பலாத்காரமொன்றே இதற்கு வழிவகுக்குமென்றும் கூறினார்.

ஸாம்பியா அறிவிப்பு

ஸாம்பியா பிரதிநிதி பேசுகையில், சட்டவிரோத ஸ்மித் ஆட்சியாளர் மீது படைபலம் உபயோகிப்பதற்கு தளம் கொடுத்துதவ ஸாம்பியா தயாராகஇருக்கிறதென்றும் தனது நாட்டு எல்லையிலுள்ளதளமொன்றிலிருந்து கொண்டு ரொடீஷியாமீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளலாமென்றும் கூறினார்

பாகிஸ்தான் பிரதிநிதியும் ரொடீஷியாமீதான படை பல உபயோகத்தை ஆதரித்துப்பேசினார்.

ரொடீஷியா கோரிக்கை

இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபைக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு ரொடீஷிய சட்டவிரோத ஆட்சியாளர் கோரியுள்ளனர்.

இக்கூட்டத்தில் "ரொடீஷியா அரசாங்க" பிரதிநிதியொருவர் கலந்து கொள்ள அனுமதி வழங்கவேண்டும் என்றும் அக்கோரிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமான குறிப்பொன்று ஐ. நா. தலைமைக்காரியதரிசிகுஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யுதாண்ட் புறக்கணிப்பு

ரொடீஷியாவில் ஸ்மித் ஆட்சியாளர் நிறுவிய அரசாங்கம் சட்டவிரோதமானது என்று ஐக்கிய நாடுகள்சபை கருதுவதால், தற்பொழுது ஸ்மித்ஆட்சியினர் சமர்ப்பித்த கோரிக்கையை ஐக்கியநாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் புறக்கணித்துள்ளார்.

ரொடீஷியா சம்பந்தமான விவாதம் இன்று தொடர்ந்துநடைபெற்றது.

துரோகம் இழைத்துவிட்டார்

தென் வியட்னும் பிரதமர் மீது பௌத்த பீடம் குற்றச்சாட்டு

டானங், மே 18

"தென் வியட்னும் பிரதமரி ஏர்மார்ஷல்கீ துரோகம் இழைத்து விட்டார்" என்று தென்வியட்னும் பௌத்த தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

"தென்வியட்னும் பிரதமரின் நடவடிக்கைகள் மூலம் மக்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப் பட்டுள்ளது. விரைவில் தேர்தல் நடைபெறும் என்று உறுதிமொழி அளிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதமரின் நடவடிக்கைகள் இதற்கு எதிர்மாறாக விருக்கின்றன. பிரதமர் கீ மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். அவர் ராஜினாமாசெய்ய வேண்டும். தென்வியட்னும் மக்களுக்கு அவர் நம்பிக்கைத் துரோகம் இழைத்து விட்டார்" என்று பௌத்த தலைமைப்பீடம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா உதவவேண்டுமென்றும் இத் தலைமையகம்கோரியுள்ளது.

"உள்நாட்டுப்போர் மூளாது"

தென் வியட்னுமில் இப்பொழுது உள்ளூர் நெருக்கடி ஏற்பட்டபோதிலும் போர் ஒன்று மூளுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்று அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன்ரஸ்க் கருத்து வெளியிட்டுள்ளார்.

பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான சட்டங்கள் விரைவில் கொண்டுவரப் படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

முக்கிய நகரங்கள் மது குண்டுவீச வேண்டாம்

பிரதமர் வில்ஸன் கோரிக்கை

லண்டன், மே 18

இராணுவ நடவடிக்கை மூலம் வியட்னும் நெருக்கடியைத் தீர்த்துவைக்க முடியாது என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் காமன்ஸ்சபையில் நேற்று அவர் உரை நிகழ்த்துகையில்; வியட்னும் நெருக்கடியில் பிரிட்டனின் நிலையை மீண்டும் தெளிவுபடுத்தினார்.

வியட்னும் யுத்தத்தில் பிரிட்டன் ஈடுபடவில்லை. பிரிட்டிஷ் துருப்புகள் அங்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று பிரதமர் வில்ஸன் கூறினார்.

வடக்கு வியட்னுமிலுள்ள ஹனோய், ஹைபாங் போன்ற பெரும் நகரங்கள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீச்சு நடத்துவதை பிரிட்டன் எதிர்க்கிறது என்றும் பிரதமர் வில்ஸன் தெரிவித்தார்.

சாதிக் கொலைமுயற்சி: 15 பேர் கைது

ஸ்ரீநகர், மே 18

காஷ்மீர் முதன்மந்திரி திரு. குலாம் சாதிக்கை கொலை செய்ய முயற்சித்தது சம்பந்தமாக பதினைந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பாராமுல்லாவில் பொதுக்கூட்டமொன்றில் திரு. சாதிக் உரை நிகழ்த்தச் சென்றபொழுது அவர்மீது வெடிகுண்டொன்று வீசப்பட்டதும் அக்குண்டு பொதுமக்கள்மீது வெடித்ததும் இதன் காரணமாக இருவர் பலியானதுடன் முப்பதுக்குதிகமானவர்கள் காயமடைந்ததும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

மேலும் ஒருவர் பலி

காயமடைந்து பாராமுல்லை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட 30 பேரில் நேற்று ஒருவர் பலியானார். இவருடன் இறந்தவர்கள் தொகை மூன்றாக அதிகரித்துள்ளது. ஆபத்தான நிலையிலிருக்கும் ஏழு பேர் ஸ்ரீநகர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நந்தா சந்திப்பு

இந்திய உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா நேற்று மூதன்மந்திரி சாதிக்கைச் சந்தித்து பராமுல்லா சம்பவம் குறித்து ஆராய்ந்தார்.

திரு. சாதிக்கும் திரு. நந்தாவும் சில நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

இந்திய பார்லிமெண்டில் திரு. நந்தா நேற்று உரை நிகழ்த்துகையில், சாதிக் கொலை முயற்சி சம்பந்தமாக சந்தேகத்தின்மீது பலர் கைது செய்யப்படலாமென்றும் இதுகுறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் அரசாங்க விரோதிகள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் கூறினார்.

தலைமை ஆசிரியர் மகாநாடு

சுழிபுரம், புதன்

வட்டுக்கோட்டைத் தொகுதி பாடசாலைதலைமையாசிரியர்களின் மகாநாடு பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலை மண்டபத்தில் வட்டார வித்தியாதரிசி திரு. என். சபாபதி தலைமையில் நடைபெற்றது. குருளை ஆசிரியர் திரு. உ. நா. தேவகடாட்சம் குருளையர் பொன்விழாவை முன்னிட்டு விரிவுரை நிகழ்த்தினார்.

வைத்தியவசதி பற்றி மந்திரி

நிந்தாவூர், புதன்

'குறைந்த காலத்திற்குள் கிராமப்புற மக்களுக்குநல்ல முறையில் வைத்திய வசதி அளிக்க நான்திட்டமிட்டுள்ளேன். அதன் காரணமாகவே நான் பிரதானமாக கிராமப்புற விஜயங்களை மேற்கொண்டுள்ளேன்"

இவ்வாறு பாலமுனை கிராம மக்கள் அளித்த வரவேற்புபசாரத்தில் குநன்றி தெரிவித்துப் பேசுகையில் சுகாதார மந்திரி திரு. எம். டி. ஏச். ஜயவர்த்தனா குறிப்பிட்டார்.

யுத்தநிறுத்த மீறல்கள் மற்றுமொரு 'நெருக்கடி'யை தோற்றுவிக்கலாம்

இந்தியாவுக்கு பாகிஸ்தான் கடுமையான குறிப்பு

ராவல்பிண்டி, மே 18

யுத்த நிறுத்த மீறல்களை இந்தியா தொடர்ந்து நடத்துமானால், மீண்டுமொரு தவிர்க்க முடியாத நிலை உருவாகலாம் என்று பாகிஸ்தான் எச்சரிக்கை செய்துள்ளது.

கடந்த பதின்மூன்றாம் திகதி இந்தியாவுக்குப் பாகிஸ்தான் அனுப்பிய குறிப்பொன்றில் வன்மையாக எச்சரிக்கை செய்துள்ளது.

"போர் நிறுத்த மீறல்களை இந்தியா தொடர்ந்து நடத்திவருவது பாகிஸ்தானின் பந்தோபஸ்துக்கு மிகவும் ஆதத்தாகவுள்ளது. இது நீடிக்குமானால், கடந்த வருடம் மூண்ட யுத்தத்தின்போது போரிநிறுத்தக் கோட்டில் ஏற்பட்டநிலைமை மீண்டும் உருவாகலாம்" என்று பாகிஸ்தான் தனது குறிப்பில் எச்சரிக்கை செய்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியத் தலைவர்கள் நடத்திவரும் விஷமத்தனமான பிரச்சாரத்தை மிகவும் கண்டிப்பதாக பாகிஸ்தான் தனது குறிப்பில் தெரிவித்திருக்கிறது.

"அபத்தமான பேச்சுக்களை இந்தியத் தலைவர்கள் பேசி வருகின்றனர். இதன்மூலம் இருநாட்டு நட்புறவுகளும் மோசமான நிலைக்குவரும். டாஷ்கண்ட் பிரகடனத்தை முழுமையாக நிறைவேற்ற பாகிஸ்தான் நாட்டம் கொண்டிருந்தாலும் இந்தியாவின் போக்கு வேறுவிதமாக இருக்கிறது" என்றும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

புகைப்படம் அத்தாட்சி!

லண்டன், மே 18

சிலதினங்களுக்கு முன்னர் சீன எல்லைக்குள் சீன ஜெட்விமானமொன்றை அமெரிக்க விமானம் சுட்டுவீழ்த்தியதை படம்பிடித்திருக்கிறதென்றும் அதன்மூலம் இச்சம்பவத்தை நிரூபிக்க முடியும் என்றும் இங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனாவின் இக்கூற்றை அமெரிக்கா நிராகரித்திருக்கிறது.

போட்டி நடாத்த முடிவு

சுழிபுரம், புதன்

வழக்கம்பரை சனசமூகநிலையத்தினர் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு திருக்குறள் போட்டியை நடாத்த ஏற்பாடுகள்செய்துள்ளனர். பதினைந்து வயதுக்குட்பட்டவர்களுக்கு போட்டி நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி

படித்த இளைஞர்களுக்கு காணி!

யாழ்ப்பாணம், வியாழன் இரணைமடுக் குளத்திலுள்ள பிரதான வாய்க்காலுக்கு அருகாமையிலுள்ள பகுதியில் உபஉணவு பயிரிடுதலுக்காக காணி வழங்குவதற்கு காணி அமைச்சு தீர்மானித்துள்ளது. 50 பேருக்கு ஆளுக்கு 3 ஏக்கர் வீதம் காணி கொடுப்பதற்கான இந்த ஒழுங்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் வற்புறுத்தலின் பேரில் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள படித்த இளைஞர்களுக்கே இந்தக் காணி வழங்கப்படவிருப்பதாக பண்டிதர் இரத்தினம் தெரிவித்தார். இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்னதாக கோரப்பட்டுள்ளன.

முதலாவது ஆண்டு விழா

சுழிபுரம், புதன் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச்சங்க மாணவர்மன்ற முதலாவது ஆண்டு நிறைவுவிழா பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. விழாவுக்கு திரு. ஏ. கருணாநிதி தலைமை வகித்தார்.

கழக மாணவர்களின் பேச்சு, சங்கீதம் ஆகியன நடைபெற்றன. புலவர் நா. சிவபாதசுந்தரம், பண்டிதர் எஸ். மயில்வாகனம், பண்டிதர் அ. ஆறுமுகம், பண்டிதை நா. பாக்கியம், திரு. மு. சிவானந்தம்உட்பட மற்றும் பலர் பேசினர்.

பிரான்ஸ்

வேலைநிறுத்தத்தினால் பெரும் பாதிப்பு

பாரிஸ், மே 18

சுமார் ஒரு கோடி தொழிலாளர்கள் நேற்று மேற்கொண்ட வேலைநிறுத்தம் காரணமாக நாட்டின் பல துறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

காலை உணவுக்குப் பாண் கிடைக்கவில்லை. வாசிப்பதற்குப் பத்திரிகைகள் வெளியாகவில்லை. போக்குவரத்துகள் தடைப்பட்டன. 'காஸ்' மின்சாரம், தபால் விநியோகம் பாதிக்கப்பட்டன. வானொலி, டெலிவிஷன் கூட இயங்கவில்லை.

சம்பளத்தை உயர்த்துமாறு கோரி தொழிலாளர் ஒருநாள் பொது வேலைநிறுத்தத்தை நேற்று மேற்கொண்டனர். (பி. டி. ஸி)

"சேவை செய்ய தயாராக வேண்டும்"

உடுப்பிட்டி, புதன்

"நமது பகுதியிலும் பாரதி சனசமூக நிலைய அங்கத்தவர்களின் தொண்டும் விடாமுயற்சியும் பாராட்டுக்குரியன. தனது சமூகம் முன்னேற வேண்டும் என்பதற்காக இங்குள்ள ஒவ்வொரு இளைஞனும் சேவை செய்யத்தயாராக வேண்டும். அப்பொழுதுதான் தனது சமூகத்தில் அவன் உயர்ந்த மனிதன் ஆகிறான்".

கொற்றுவத்தை கிராம முன்னேற்றச் சங்கத்தலைவரும் சமாதான நீதிபதியுமான திரு. இ. சின்னத்தம்பி கொற்றுவத்தை பாரதி சனசமூக நிலையத்தாரகல் நடாத்தப்பட்ட விளையாட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சமரபாகு அ. மி. த. பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வடமராட்சி வீரர்களின் மல்யுத்தமும், சிலம்புக்கம்பு விளையாட்டுக்களும், தீப்பந்த விளையாட்டுக்களும் இடம் பெற்றன.

16-வது ஆண்டு திருக்குறள் மகாநாடு கொழும்பில் நடைபெறும்

கொழும்பு, புதன்

தமிழ் மறைக் கழகத்தினர் 16-வது ஆண்டு திருக்குறள் மகாநாட்டை இம்முறைகொழும்பில் நடாத்துவதற்கான ஏற்பாட்டை செய்து வருகின்றனர்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் ஜூன் 1-ம் 2-ம் திகதிகளில் விவேகானந்தா சபை மண்டபத்திலும் சைவமங்கையர் கழகம் மண்டபத்திலும் மகாநாடு நடைபெறுமென தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் இரத்தினம் தெரிவித்தார்.

பல ஆண்டுகளுக்குப்பின்

ஏகமனதாக தலைவர் தெரிவு

மாவிட்டபுரம், புதன்

அகில இலங்கை காரியாதிகாரிகள் சங்கத்தின் தலைவராக முதன் முறையாக தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இப்பதவிக்கு வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காரியாதிகாரிகள் சங்கக் கூட்டத்திற்கு தலைவர் திரு. சமரசேகரா தலைமை வகித்தார். புதிய தலைவராக திரு. தி. முருகேசபிள்ளையின் பெயரை திரு. சமரசேகரா பிரேரிக்க திரு. லவலு மதுராலா அனுவதித்தார். ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட காரியாதிகாரி திரு. முருகேசபிள்ளை நன்றி தெரிவித்துப் பேசுகையில் இன, மத பேதமின்றி தொண்டு செய்யத் தமக்கு பூரண ஆதரவு தரும்படி கேட்டுக் கொண்டார். இச்சங்கத்தில் 140 சிங்களக் காரியாதிகாரிகளும் 20 தமிழ்க் காரியாதிகாரிகளும் அங்கம் வகிக்கிறார்கள்.

கைத்தொழில் அமைச்சின் அங்கீகாரம்

கொழும்பு, புதன்

ஜப்பானும் இந்தியாவும் இலங்கையும் கூட்டாக இலங்கையில் கார்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைக்க கைத்தொழில் அமைச்சு பூர்வாங்கமாக அங்கீகரித்துள்ளது.

துலக்கப்படாத இருகொலைகள்

கொழும்பு, புதன்

கடந்த வாரம் கொழும்பு நகரில் நடைபெற்ற இரு கொலைகள் சம்பந்தமாக பொலிசார் கையில் இதுவரை யாருமே சிக்கிக் கொள்ளவில்லை! பொலிசார் இதுசம்பந்தமான தகவல்களையறிவதற்காக இதுவரை எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பயனளிக்காமல் அவர்களுக்குப் பெரும் தலையிடியை இந்தக் கொலைகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இருகொலைகளும் ஜன நெருக்கமான பகுதிகளில் நடைபெற்றிருந்தும், பொது மக்களிடமிருந்து பொலிசார் எந்தவிதமான தகவலையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

"எங்களுக்கு எதுவும்தெரியாது, நாங்கள் யாரையும் காணவில்லை" என பொலிஸார்பொதுக்களை விசாரித்தபோது அவர்கள் கையை விரித்து விட்டார்கள்.

கும்பனித் தெருவிலுள்ள டிமெல் ரோட்டில் ஆர். டி. தர்மதாசா என்ற இருபத்திஞறு வயது இளைஞர் மார்பில்கத்தியால் குத்தப்பட்ட நிலையில் இறந்து கிடந்ததை பொலிசார் கண்டனர், இது சம்பந்தமாக நடைபெற்ற மரணவிசாரணையில், கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அடுத்த சம்பவம் பாலத்துறையிலுள்ள பேர்குசன் ரோட்டில் நடந்திருந்தது. இருபதுவயது வாலிபர் எம். எம். ஜினதாசா என்பவர் கத்தியால் குத்தப்பட்டநிலையில் இறந்து கிடந்ததை பொலிசார் கண்டனர். இதுவும் கொலையென்ற தீர்ப்பளிக்கப்பட்டது.

இப்படியும் நடக்கிறது!

யாழ்ப்பாணம், வியாழன்

1966-ம் ஆண்டிற்குரிய லெசென்ஸ் இல்லாமலே சில இ. போ. ச. பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

மோட்டார் போக்குவரத்துச்சட்டத்தின்படி 1966-ம் ஆண்டிற்குரிய லெசென்ஸ் பெறுவதற்கு 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னரே மனுச்செய்ய வேண்டும்.

இ. போ. ச. சாரதி விடுதலை

கொழும்பு, புதன்

கவனயீனமாக ஆரியதாசா என்பவருக்குச் சொந்தமான மின்சார வேலைப் பொருட்களை சேதப்படுத்தியதாக இ. போ. ச. சாரதி டபிள்யூ. பெண்ஜமென்மீது தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. சிவசெல்லையா எதிரியை விடுதலை செய்தார்.

முத்தமிழ்விழா

மண்டைதீவு, புதன்

மண்டைதீவு உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 20-வது ஆண்டு முத்தமிழ் விழா ஆசிரியர் திரு. ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் கந்தசுருகேசனூர் அரங்கைத் திறந்து வைத்தார்.

சைவப்புலவர் க. சி. குலரத்தினம், திரு. க. சொக்கலிங்கம், திரு. கே. பி. ஹரன், செல்வி செ. சரஸ்வதி, ஆ. நமசிவாயம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

உ. கிழங்கு தட்டுப்பாடு

கொழும்பு, புதன்

உருளைக்கிழங்கு தட்டுப்பாடு தற்பொழுது நிலவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கப்பல் வருவதில் தாமதம் ஏற்பட்டதால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அடுத்தமாதம் நிலமையில் மாற்றம் ஏற்படலாமென வர்த்தகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கூ. மொ. வி. ஜவுளி விநியோகம்

கொழும்பு, புதன்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன ஜவுளி நிலுசுகளை தனியார்துறை மூலம் விநியோகிக்கும் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

இந்த விஸ்தரிப்பில் 160 தனியார்துறை வர்த்தகர் இடம் பெற்றிருக்கின்றனர். இவர்களுடன் 400 தனியார் துறை வர்த்தகரைச் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காரியாதிகாரி கவலை

மாங்குளம், புதன்

'வவனியா வடக்கு நெடுங்கேணிப்பகுதியில் பொருளாதாரநிலை மிகவும் தாழ்ந்துகொண்டு போகின்றது. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு இப்பகுதியில் நெசவாலைகள் அமைக்கப்படவேண்டும்' என்று நெடுங்கேணிப் பகுதி காரியாதிகாரி திரு. ஜே. செந்தில்நாதன் தமது காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில், இப்பகுதியில் ஒரு நெசவாலையை அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் இதற்கு இங்குள்ளவர்கள் ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டுமென்றும் சொன்னார்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Joan Sims
in
NURSE on WHEELS

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி
3-30, 6-30, 9-30
WILD HARVEST

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி2-30, 6-30, 9-45க்கு
சிவாஜி—சாவித்திரி
நடித்த
அமரதீபம்

6-வது அமோக வெற்றி வாரம்
திங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா
(அம்பாரை)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

உங்களுக்கு வேண்டிய
புடவைகளையும்
சிறுவர் சிறுமிகளுக்கு ஏற்ற
றெடிமேட்ஸ் சட்டைகளையும்
மற்றும்
சகல விதமான
துணி வகைகளையும்
தேர்ந்து எடுப்பதற்கு
ரொலறம் சை
நாடுங்கள்.
46, பெரிய தெரு, — யாழ்ப்பாணம்.
போன். 7099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழநாடு" வெற்றிக் கிண்ணத்தை கரவெட்டி கழகம் சுவீகரித்தது

ஒலிம்பிக் விளையாட்டுக்கழக போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினரால் "ஈழநாடு" வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட மூன்றாவது வருட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் "ஈழநாடு" வெற்றிக் கிண்ணத்தை கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் சுவீகரித்தது.

திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வெற்றிக் கேடயம் வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டது.

காலஞ்சென்ற செனட்டர் திரு. சு. நடேசபிள்ளையின் வெள்ளிக் கிண்ணம் தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. தெல்லிப்பழை கி. ச. தலைவர் திரு. த. செல்வரத்தினம் வெள்ளிக்கிண்ணம் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. ஒலிம்பிக் விளையாட்டுக் கழகக் கிண்ணம் 'மின்மின்' விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கப்பட்டது.

குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்திற்கும் கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சாம்பியன் போட்டியில் கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2-1 ஆட்டங்களினால் வெற்றி பெற்றது. திரு. இ. கே. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்.

திருமலை விளையாட்டுக் கழகத்திற்கும் வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற விசேஷ கைப்பந்தாட்டப் போட்டியில் 2-0 ஆட்டங்களால் திருமலைக் கோஷ்டி வெற்றி பெற்றது. திரு. கே. ஜத்து குலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

சுற்றுலா

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை கில்னர் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள், தலைமைப்போதனாசிரியர் திரு. அன்ரனி தலைமையில் இலங்கையின் முக்கிய இடங்களான கண்டி, நுவரேலியா, கொழும்பு, அனுராதபுரம், வாழைச்சேனை ஆகிய இடங்களுக்கு சுற்றுலா சென்றுவிட்டுத் திரும்பியுள்ளனர்.

சரித்திரம், கைத்தொழில் சம்பந்தப்பட்ட இடங்களை தமது சுற்றுலாவின்போது பார்வையிட்டனர்.

ஊழியர் தற்காலிக வேலைநீக்கம்

கொழும்பு, புதன்

விமான டிக்கெட் ஒன்று குறைவாகஇருந்ததையிட்டு 'ஏயர் சிலோன்' ஸ்தாபன ஊழியரொருவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை அபிவிருத்தி

மாவிட்டபுரம், புதன்

வலிகாமம் வடக்கில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்யும் வகையில் துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. விளையாட்டுச்சங்கங்களையும் பிரமுகர்களையும் கொண்ட விளையாட்டு மகாசபை ஒன்றினை அமைப்பது பற்றி வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை விளையாட்டு ஸ்தாபனங்களையும், விளையாட்டுத்துறையில் ஊக்கம் கொண்ட பிரமுகர்களையும் அழைத்து மகாநாடு ஒன்றினைக் கூட்ட முடிவு செய்துள்ளார்.

'டணால்' வருகிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

தென்னிந்திய திரையுலகின் பிரபல நகைச்சுவை நடிகர் 'டணால்' கே. ஏ. தங்கவேலு இம்மாதம் 25-ம் திகதி இலங்கை வந்துசேரவிருக்கிறார். இவருடன் நடிகைகள் எம். சரோஜா, எல். விஜயலக்ஷ்மி ஆகியோருடன் ஒரு கோஷ்டியினரும் வருகின்றனர்.

இவர்கள் இலங்கையில் இருக்கும் இருவார காலத்தில் கொழும்பு, யாழ்ப்பாணம், அநுராதபுரம் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடாத்துவர்.

'விளையாட்டு அறிவையும் ஊக்கத்தையும் வளர்க்கிறது'

மாவிட்டபுரம், புதன்

"மக்கள் மனதில் இயல்பாக உள்ள சில குணாதிசயங்களைப் போக்க விளையாட்டுக்கள் பெரிதும் உதவுகின்றன. விளையாட்டுகளில் ஈடுபடுவதனால் உடல் வலிமை பெறுவதுடன் உள்ளத்தில் ஊக்கமும் ஏற்படும்" என்று சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகப் பரிசளிப்பு விழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. இ. சிவனேசன் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு வைபவத்தில் திரு. பாலசிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

கிரேக்கர்கள் தத்துவ ஞானிகளாக இருந்த போதிலும் அவர்களால் விளையாட்டுக்களும் போற்றி வளர்க்கப்பட்டன உள்ளத்தில் அறிவு மட்டும் இருந்தாற் போதாது. உடல் வலிமையும் வேண்டும் என்ற உண்மையை அவர்கள் உலகுக்கு உணர்த்தினார்கள்.

மற்றவரைத் தாழ்வு படுத்தும் எண்ணம், சண்டையிடும் எண்ணம் என்பன இயல்பாக உள்ள மனித குண இயல்புகளாகும். இந்த எண்ணங்களை விளையாட்டுக்களில் ஈடுபடும் போது மாற்ற முடியும்.

வலி-வடக்கு காரியாதிகாரி திரு டி. முருகேசபிள்ளை பேசியதாவது: இலங்கை அரசியலில் தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின் விளையாட்டுத்துறையில் புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. தேசிய விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்யவென்றே ஒரு அமைச்சு தனியாக இயங்கி வருகிறது. இந்த அமைச்சின் முயற்சியினால் மாவட்டங்கள் தோறும் நவீன வசதிகளுடன் விளையாட்டு அரங்குகள் நிறுவப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படுவது அவசியமாகும்.

வழக்கறிஞர் திரு. எஸ் ஸ்ரீதரன் பேசியதாவது எதிர்காலத்தில் இந்த நாட்டின் தலைவர்களாக விளங்கும் இளைஞர்களுக்கு வியாட்டுத் துறையில் போதிய ஊக்கமளிக்கப்படுதல் அவசியமாகும். பரந்த நோக்கத்தின் அடிப்படையில் இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டு நற்பண்புகளைப் பெறவேண்டும்.

திரு.வி. பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

கருத்து வேறுபாடுக நிறைந்த உலகத்தில், ஒன்றோடு ஒன்றுமுட்டி மோதிக் கொள்ளும் நாடுகள் மத்தியில் ஒரே விஷயத்தையிட்டு ஒற்றுமை காணப்படுகிறது. போர் முனையில் எதிரிகளாகக் காணப்படும் நாடுகள் விளையாட்டுப் போட்டியின் போது காட்டும் ஒத்துழைப்பும் இணக்கமும் எல்லோரையும் கவரக் கூடியன. ஒவ்வொரு நாடும் தத்தமது நாடுகளுக்கு பெருமை தேடித் தருகின்ற முயற்சியில் ஈடுபடுகின்றன. விளையாட்டு ஒன்றின் போது தான் இத்தகைய சில பண்புகளைக் காணமுடிகிறது.

திருமதி முருகேசபிள்ளை பரிசில்களை வழங்கினார்.

பட்டினசபை தீர்மானம் பொதுமக்கள் அதிருப்தி

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை பட்டினசபை மின்சார பாவனையாளரிடம்இருந்து 25 வீதம் மேலதிக கட்டணப்பணமாக அறவிட தீர்மானித்திருப்பதைத்தொடர்ந்து இப்பகுதி பொதுமக்கள் பருத்தித்துறைஎம். பி. திரு. கே. துரைரத்தினத்திடம் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். அத்துடன் உள்ளூராட்சி அமைச்சருக்கு இது சம்பந்தமாக விண்ணப்பம் ஒன்றையும் எம். பி. மூலமாக அனுப்பியுள்ளனர்.

விளையாட்டுத் துறையில் தமிழர் உஷாராக இருக்கவேண்டும்!

ஆண்டு விழாவில் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

சுண்டிக்குளி கிறிம்சன் விளையாட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டுவிழா கிறிம்சன் மைதானத்தில் யாழ். மேயர் திரு. அ. த. துரையப்பா தலைமையில் நடைபெற்றது. திரு. துரையப்பா நமது தலைமையுரையில் விளையாட்டுக்கழகங்களுக்கு உற்சாகம் கொடுத்தால்தான் தமது நாட்டில் சிறந்த விளையாட் வீரர்களைப் பெறமுடியும் என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் இதுவரை யாழ்ப்பாணத்தில் பிறநாடுகளில் இருந்து விளையாட்டு வீரர்கள் இங்கு வராமைக்குக்காரணம் இங்கு ஒருமுறையான விளையாட்டுமைதானம் இல்லாமையே என்றும் அக்குறையை இனிமேல் யாழ்ப்பாண விளையாட்டரங்கு தீர்த்துவைக்குமென்றும் கூறினார். நீச்சல் தடாகம் ஒன்றை அமைக்க தாம் ஆரம்பத்திலிருந்தே முயற்சியெடுத்துவருதாகவும், மாநகர சபையின் உதவியுடன் இது விரைவில் நிறைவேறும் என்றும் சொன்னார்.

ஆசிரியர் எஸ். சதாசிவம் பேசுகையில் கூறியதாவது:

"விளையாட்டுத்துறைக்கு மேலைநாடுகள் எவ்வளவு கூடிய கவனம் எடுத்துள்ளனரோ அதைப்போன்று நமதுஇலங்கையிலும்முக்கிய கவனம் எடுக்கவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இத்துறையிலும் தமிழர் புறக்கணிக்கப்படாமல்இருக்கநாம் உஷார் நிலையில் இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் யாழ். மகநகரசபை முக்கிய கவனம் எடுக்கவேண்டும்.

"இதுபோன்ற சிறு விளையாட்டுக்கழகங்களில் முன்னேற்றத்துக்கு லழிவகுத்தால்தான் சிறந்த விளையாட்டு வீரர்கள் பலர் நமது நாட்டில் தோன்றுவதற்கு ஏதுவாக இருக்கும். சாதி சமய வேறுபாடின்றி மனிதன் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து வாழவைக்கும் கைங்கரியம்விளையாட்டைத் தவிர வேறு எதனாலும் முடியாது."

கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

குடும்பத்திட்டச் சுவரொட்டிப் (POSTER) போட்டி

பருத்தித்துறைச் சுகாதார வாரக்கொண்டாட்டக் குழுவினரால், மேற்படி போட்டியொன்று ஒழுங்கு செய்யப்படும், கவர்ச்சிகரமான ரொக்கப்பரிசு களும் சான்றிதழ்களும்வழங்கப்படும் முடிவுதிகதி 10-6-66 ஆகும். வேண்டிய விபரங்களுக்குப் பருத்தித்துறைச் சுகாதார வைத்திய அதிகாரி அவர்களுக்கு எழுதவும்.

424

வரிவிளம்பரம்

தேவை

கடைப்பொறுப்பாளர்

பிணைப்பணம் செலுத்தக் கூடிய கடைப்பொறுப்பாளர்தேவை. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். இந்திரா ஸ்ரோர்ஸ், கே.கே.எஸ். ரோட், கொக்குவில். 360

காணவில்லை

தங்கச்சங்கிலி

17-5-66-ல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மருத்துவமாது பரீட்சை நேரத்தில் V 122 சுட்டிலக்கத்தையுடைய பிள்ளை நாலுபவுண் நிறையுள்ள தங்கச்சங்கிலியை தவறவிட்டுவிட்டார். கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்கின்றோம். 366

உறுதி

'அலடித்துறை, 'கிடாய் விழுந்தான் பள்ளம்' ஆகிய காணிகளின் உறுதிகள் பிரயாணம் சென்ற வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' கந்தோரில் சேர்த்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 364

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூர ஜனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

இன்று வில்லூன்றி விநாயகர் ரதோற்சவம்

இன்று ஸ்ரீ வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய ரதோற்சவம் காலை 7 மணிக்குக் காலசந்திப் பூசையுடன் ஆரம்பமாகும். நிகழ்ச்சி இரவு 8 மணிக்கு வசந்தமண்டபப்பூசையுடன் முடிவடையும்.

க. பொ. த. உயர்தரத் தமிழ்ப்பாட நூல்கள் 1967—68

1. கந்தபுராணம்—உற்பத்திகாண்டம்:

காமதகனம்

★ காம தகனப்படலம் ★ மோன நீங்குபடலம்
★ தவங் காண்படலம் ★ மணம்பேசுபடலம்
★ வரைபுனைபடலம் ★ கணங்கள்செல்படலம்

உரை விளக்கம்: பண்டிதர் க. வீரகத்தி

[இயக்குநர்: வாணி கலைக்கழகம்]

'பத' மான பதவுரை! எடுப்பான உரைநடை!
இதமான சொல்லடக்கம் (பதசாரம்)!
இதயம் மகிழ் நுண்கருத்து!
வரிக்கு வரி இழையோடும் சிந்தனைத் திறனாய்வு;
உரிப் பொருளுக்கு உயர்ந்த விளக்கம்!
இலக்கியச் சுவையைத் தூண்டும் கவிதை நயம்!
இனிய விவாத நெறி விளக்கம்!
பாத்திரக்குண இயல்புகளின் கடைசல்!

தேர்வுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நுண்ணிய இலக்கண விளக்கம்.

இது ஒரு 'வரதர் வெளியீடு'

விற்பனையாளர்:

ஆனந்தா அச்சகம் - புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

423

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புவடக்கு-யாழ்ப்பாணம் கிரிக்கெட்மோதல்

கணேஷகுமார் (ஆட்டமிழக்காமல்) 89 ஓட்டங்கள்எடுத்தார்

சிவசோதி 46ஓட்டங்களில் 5விக்கட்டுகள்வீழ்த்தினர்

கொழும்பு வடக்கு: 2-ம் இனிங்ஸ் 8: 218ஓட்டங்கள்

கொழும், புதன்

கொழும்பு வடக்கு பாடசாலைகள் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கோஷ்டிக்குமிடையே கொட்டாஞ்சேனை செண்பெனடிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கிறது.

ஸ்கோர் விபரம்

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு வடக்குப் பாடசாலைகள் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 154 ஓட்டங்கள் எடுத்தது.

எவ் டயஸ்	32
கே ரணசிங்கா	37
பி விஜயசேகரா	29
ஏ டி கொஸ்தா	01
எஸ் ரி டி சில்வா	07
எல் குணரத்ன	00
பி ஜோன்பிள்ளை	18
ஜி ஸி பெரேரா	11
என் செனவரத்ன	01
என் குணதுங்கா	05
எல் நவரத்ன (ஆட்டமிழக்கவில்லை)	04
மேலதிக ஓட்டங்கள்	09
மொத்த ஓட்டங்கள்	154

இதன்பின்னர் யாழ்ப்பாணம் பாடசாலைகள்கோஷ்டி விளையாடத் தொடங்கியது. இக்கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 73 ஓட்டங்கள் எடுத்தது.

எஸ் சூரியகுமார்	04
எஸ் ஜெயநாயகம்	06
எஸ் ராஜரத்தினம்	14
எஸ் பற்குணராசா	17
டி கணேஷகுமார்	04
எஸ் நிர்மலானந்தம்	00
ரி விபுலானந்தா	19
(ஆட்டமிழக்கவில்லை)	
எஸ் சிவசோதி	02
கே சண்முகலிங்கம்	01
ரி வைரவப்பிள்ளை	06
மொத்த ஓட்டங்கள்	73

நேற்று கொழும்பு வடக்கு பாடசாலைகள் கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கியது. இதில் எட்டு விக்கட்டுகளை இழந்து மொத்தம் 218 ஓட்டங்களை எடுத்தது.

எவ் டயஸ்	28
எஸ் ரணசிங்கா	23
பி விஜயசேகரா	71
ஏ டி கொஸ்தா	04
எஸ் ரி டி சில்வா	46
எல் குணரத்ன	17
பி ஜோன்பிள்ளை	02
ஜி ஸி பெரேரா	07
என் செனிவரத்ன	07
மேலதிக ஓட்டங்கள்	13
மொத்த ஓட்டங்கள்	218

(எட்டு விக்கட்டுகளுக்கு)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கோஷ்டி நேற்று தனது இரண்டாவது இனிங்ஸில் ஆட்டநேரம்வரை ஒன்பது விக்கெட்டுகளை இழந்து மொத்தம் 173 ஓட்டங்கள் எடுத்தது.

ஸி சூரியகுமார்	04
எஸ் ஜெயநாயகம்	00
எஸ் ராஜரத்தினம்	23
எஸ் பற்குணராசா	27
டி கணேஷகுமார் (ஆட்டமிழக்கவில்லை)	89
ஜி ஏபரஹாம்	05
ரி விபுலானந்தா	00
எஸ் நிர்மலானந்தம்	07
ரி வைரவப்பிள்ளை	07
எஸ் சிவசோதி	00
கே சண்முகலிங்கம்	02
மேலதிக ஓட்டங்கள்	8
மொத்த ஓட்டங்கள்	173

(ஒன்பது விக்கட்டுகளுக்கு)

சபாஷ் கணேஷ்குமார்

முதல் இன்னிங்ஸில் கொழும்பு வடக்கு பாடசாலைகள் கோஷ்டியே கூடுதலான ஓட்டங்களைப் பெற்று ஓரளவு வெற்றியும் அடைந்தது. ஆனால் இரண்டாவது இன்னிங்ஸில் கொழும்பு வடக்கு கோஷ்டி ஓரளவு திறமையாக விளையாடிய பொழுதும் யாழ்ப்பாணம் பாடசாலைக் கோஷ்டி முதல் இன்னிங்ஸிலும் பார்க்க மிகவும் திறமையாக விளையாடியிருக்கின்றது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கோஷ்டிவீரர் டி.கணேஷகுமார், கொழும்புவடக்கு கோஷ்டியினரின் பந்துகளை விளாசித்தள்ளி மிகவும் கூடுதலான 89 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டது பாராட்ட வேண்டிய விஷயமாகும். கொழும்பு வடக்கு கோஷ்டியைச் சேர்ந்த பி. விஜயசேகராவே அக்கோஷ்டியில் மிகவும் கூடுதலான (71) ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

பந்துவீச்சு

பந்தெறி விச்சைப் பொறுத்த மட்டில் கொழும்பு வடக்கு கோஷ்டி இரண்டாம் இன்னிங்ஸில் யாழ்ப்பாண வீரர்கள் டி. கணேஷகுமார் 73 ஓட்கள் நஷ்டத்துக்கு 3 விக்கெட்டுகளையும் எஸ். சிவசோதி 65 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கெட்டுகளையும் வைரவப்பிள்ளை 14 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளனர். கே சண்முகலிங்கம், எஸ். சூரியகுமார், எஸ். பற்குணராசா ஆகியோர் விக்கெட் எதையும் வீழ்த்தவில்லை.

முதல் இன்னிங்ஸில் டி. கணேஷகுமார் 46 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 1 விக்கெட்டையும், கே. சண்முகலிங்கம் 20 ஓட்டங்கள்நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளையும் எஸ். சிவசோதி 46 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கட்டுகளையும், சி. சூரியகுமார், ரி. வைரவப்பிள்ளை ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர்.

கொழும்பு வடக்கு கோஷ்டியைப் பொறுத்தவரை எல். குணரத்ன, என். குணதுங்கா, பி. விஜயசேகரா, பி. டி. சில்வா, என். செனிவரத்ன ஆகியோர் பந்து வீச்சில் குறிப்பிடத்தக்க வர்கள்.

ஒரே கண்ணோட்டம்

யாழ்ப்பாணம் வடக்கு பாடசாலைகள் கோஷ்டியில் திறமையானவர்கள் இருந்த பொழுதிலும் கொழும்பில் தங்களது சாதனையை நிலை நாட்டத் தவறிவிட்டனர். உள்ளூரில் "விளாசி"த் தள்ளும் சில கிரிக்கெட் வீரர்கள் கொழும்பில் "கோட்டை" விட்டுவிட்டனர். இருந்த பொழுதிலும் கிரிக்கெட் வீரர் டி. கணேஷகுமாரின் சாதனை உண்மையிலேயே பாராட்ட வேண்டியது. அவர் எடுத்த ஓட்டங்கள் யாழ்ப்பாணக் கோஷ்டிக்கு மகத்தான தொரு பாராட்டை தேடிக் கொடுத்திருக்கிறது.

முதல் இனிங்ஸிலேயே கூடுதலான ஓட்டங்களை யாழ்ப்பாணம் எடுத்திருந்தால், நிலைமை இவர்களுக்குச் சாதகமிருந்திருக்கும். ஆனால் இதனை கொழும்பு வடக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸில் காட்டிவிட்டது. கொழும்பு வடக்கு வீரர் விஜயசேகரா 105 நிமிடங்களில் 71 ஓட்டங்களை எடுத்திருப்பது பாராட்டக்கூடியது. யாழ்ப்பாணம் பந்தெறி வீரர் எஸ். சிவசோதி 46 ஓட்டங்களில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார்.

யாழ்ப்பாணக் கோஷ்டி பல சந்தர்ப்பங்களை இழந்திருக்கிறது. பொதுவாக பார்க்கபோனால் சாதனை, இருபக்கங்களிலும் இருக்கிறது

படித்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ய நிலைமை ஏற்படமாட்டாது.

வடபகுதியில் படித்த இளைஞர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு முன்னேறுவதற்கு நல்லவாய்ப்பு ஏடு. இப்படியான தொழில்களில் ஈடுபடுவதற்கு படித்த வாலிபர்களுக்கு முதலில் பின்னிற்கத்தான் தோன்றும். ஆனால், ஈடுபட்டால் அதன்மூலம் எவ்வளவு முன்னேற்றம் கிடைக்குமென்பதை இளைஞர்கள் கட்டாயம்தெரிந்து கொள்வார்கள். இதேபோன்றே கமத்தொழிலிலும் ஈடுபட்டு இளைஞர்கள் தமது வாழ்க்கையை தொழிப்பாக்கிக் கொள்ளலாம்.

திருமண அழைப்பு

எங்கள் மகள் தெய்வயானி (இராதா)க்கும் கோண்டாவில் திரு. அ. இராமுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் இலங்கை வங்கியைச் சேர்ந்தவருமான உருத்திரமூர்த்திக்கும் வைகாசி மாதம் 9-ந் திகதி (22-5-66)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 7-45க்கும் 8-30க்கும் இடையில் திருமணம் நடைபெறும். அவ்வமயம் நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். இளைப்பாறிய மாவட்ட விவசாய அதிபர், S. K. துரைசிங்கமும் பாரியாரும், "பிருந்தாபவனம்" 41 கண்டிவீதி, யாழ்ப்பாணம். 354

○

திருமண அழைப்பு

யாழ்ப்பாணம்பெரிய ஆஸ்பத்திரியில் வேலை செய்பவரும், முன்னாள் கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் கடமையாற்றிய சரசாலையைச்சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் சுப்பையாவினதும், திருமதி சுப்பையாவினதும் மகன் டாக்டர் புவிராசசிங்கத்திற்கும், உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் ஆறுமுகம் கதிரித்தம்பியினதும் திருமதி கதிரித்தம்பியினதும் புத்திரி ஜெகதீஸ்வரிக்கும் 26-5-66 வியாழக்கிழமை மாலை 7-40 தொடக்கம் 9-40 வரையில் திருமணம் ஆனைக்கோட்டையில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும்அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படமாட்டா. திருமதி. சுப்பையா; கதிரித்தம்பி தம்பதிகள். 265

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63 இல்லத்திலுள்ளவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டுள்ள நாடு கடத்தல் கொள்கைக்கு முரணாக இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் நிலவுகின்றது. இந்திய வம்சாவளியினர் வலுக்கட்டாயமாக நாடு கடத்தப்படுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி தமிழ்க்காங்கிரஸ் ஆகியவை பாராளுமன்றத்தில் கடும் ஆட்சேபம் தெரிவித்திருப்பது இங்கு ஞாபகமூட்டவேண்டியதொன்றாகும்.

பிரஜாவுரிமை நீதிமன்றம்

மேற்படி மசோதா எட்டு அம்சங்களைக் கொண்டதாகவிருக்கின்றது. இதில் பிரஜாவுரிமை சம்பந்தமான நீதிபன்றங்களுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது இம்மன்றங்கள் மாவட்ட அடிப்படையில் இயங்கும். இலங்கை பிரஜாவுரிமை மறுக்கப்பட்டதற்கு எதிரான அப்பீல் மனுக்களை விசாரிக்கவும் நிர்ணயிக்கவும் இந்த நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இருக்கும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் இந்த மசோதாவின் அடிப்படையில் நியமிக்கப்படவிருக்கும் தகுதியான அதிகாரிகளின் தீர்ப்புகளை எதிர்த்து தாக்கல்செய்யப்படும் மனுக்களை இந்த நீதிமன்றங்கள் விசாரணைசெய்யும்.

அப்பீல் இல்லை

மசோதாவின் 28-வது ஷரத்தின்படி பிரஜாவுரிமை நீதிமன்றத்தின் தீர்ப்பே முடிவானதாக இருக்கும்.

அதனை எதிர்த்து வேறு எந்த நீதிமன்றத்தின் விசாரணைக்கும் மனுச்செய்ய இயலாது.

பிரஜாவுரிமை வழங்க, அல்லது மறுக்க, அல்லது இலங்கையிலிருந்து வெளியேற்ற விடுக்கப்படும் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றும் மந்திரியின் நடவடிக்கைகளை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் மனுச்செய்துகொள்ளவும் இயலாது. அப்படியான மந்திரியின் உத்தரவுகளை நிறைவேற்ற மறுக்கும் ஒருகப்பலின் காப்டன், அல்லது விமானத்தின் பைலட் ஆகியவர்களுக்கு 5 வருடம் ஆக்கூடுதலான சிறைத்தண்டனை விதிப்பதற்கும் மசோதா வகை செய்கின்றது.

இம் மசோதா நிறைவேறியபின்னர், அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டதுபோன்ற தன்மையுடையதாக விளங்கும். பிரஜாவுரிமைபெறும் ஒரு நபர் விசுவாசப்பிரமாணம் எடுத்தபின்னர் இலங்கையின் பதிவுப் பிரஜைகள் அனுபவிக்கும் எல்லா உரிமைகளும் உடையவராக இருப்பார். இதில் இருந்து சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி பிரஜாவுரிமை பெறுகிறவர்களைத் தனியாக ஒரு டாப்பில் வைப்பது என்ற திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் கொள்கையை அரசாங்கம் முற்றாக புறக்கணித்து விட்டது என்பது புலனாகின்றது.

வருடம் 800 தாதிகள் சேர்க்கப்படுவர்

சுகாதார இலாகாவின் நடவடிக்கை

கொழும்பு, புதன்

அடுத்த பத்து ஆண்டு அடுத்த 800 சுகாதார தாதிகளை சேவைக்கமர்த்துவதற்கு சுகாதார இலாகா முடிவுசெய்திருக்கின்றது. சமீப காலத்தில் 200 தாதிகள் வேலைக்கு எடுக்கப்பட்டனர்.

புதிதாக எடுக்கப்படவுருக்கும் தாதிகள் தகுதியை உத்தேசித்தும் மக்கள் தொகையை அனுசரித்தும் மாகாணங்கள்தோறும் தெரிவுசெய்யப்படுவார்கள்

தற்பொழுது நாடு பூராவும் 3 ஆயிரம் பயிற்சி பெற்ற தாதிகளும் 1600 மாணவ தாதிகளும் இருக்கின்றார்கள். இந்தத் தாதிமார்கள் தகுந்த பயிற்சியளிக்கப்பட்டபின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆஸ்பத்திரிகளில் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள்

'ஸ்கிறீன்' கண்டனம்

கொழும்பு, புதன்

தமிழ், இந்தி திரைப்படப் பாடல்களை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் ஒலிபரப்பியதற்கான ஆதாயப்பங்குப் பணம் (ராயல்டி) செலுத்த மறுத்தது சம்பந்தமாக தகவல் ஒலிபரப்பு புதிய டைரக்டர் ஜெனரல் இந்தியாவிலிருந்து வெளியாகும் சினிமா பத்திரிகையான 'ஸ்கிறீன்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது

தன்னிறைவு . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாணவர்களின் உயர்படிப்புக்கு வழிகோலுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் பொதுக்குழு தீர்மானித்துக்கொண்டது

சமீபத்தில் பார்லிமெண்டின் நிறைவேறிய தமிழ் மொழி (விசேஷ விதிகள்) சட்டம் அமுல்செய்யப்படுவது குறித்து கவனம் செலுத்துவதற்கெனவும் உபகுழுவும் நியமிக்கப்பட்டது

மரண அறிவித்தல்

எல். எஸ். வைரவநாதன்

ஏழாலை வடக்கைச் சேர்ந்தவரும் புன்னாலைக்கட்டுவன் அ. மி. பாடசாலை தலைமையாசிரியருமான செல்லப்பா சாமுவேல் வைரவநாதன் அகால மரணமானார். இவர் இலகுப்பிள்ளை செல்லப்பாவின் சிரேஷ்ட புதல்வரும், இரத்தினம்மாவின் அருமை கணவரும், இரத்தினராஜன், றெஜினு, இரத்தினரூபன். இரத்தினசேயன் ஆகியோரின் தந்தையாரும், நல்லதம்பி, இளையபா, திருமதி நல்லையா ஆகியோரின் சகோதரரும், தாகந்தையாவின் (இளைப்பாறிய ஆசிரியர்) மருமகனும், சுகிதரட்ணசிங்கம், செல்வநாயகம், கனகசிங்கம், திருமதி ஆனந்தராஜன், பாலசுந்தரம் ஆகியோரின்மைத்துனருமாவார். சேம ஆராதனை இன்று (19-5-66) மாலை 4-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org